Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| | |
|---|---|
| Regd. No.<br>TN / CC (S) DN / 119 / 12-14 | Licensed to Post without Prepayment<br>WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14 |

வேணு : 18 | செப்டம்பர் 2012 | கானம் : 2



ஆகஸ்டு 18, 2012 - ரேசாக்கலைவம்

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD

**Related Websites : www.namadwaar.org** **Email:contact@namadwaar.org**

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

## மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிக்கை




வேணு : 18 | செப்டம்பர் 2012 | கானம் : 2

Delivered by India Post www.indiapost.gov.in


ஆகஸ்டு 9 , 2012 – சென்னை ப்ரேமிக பவனத்தில்
கோகுலாஷ்டமி உற்சவம்


ஆகஸ்டு 18 , 2012 –திருமஞ்சனம்


ஆகஸ்டு 13 , 2012 –ஏகாதசி – கருடவாஹனத்தில்
ஸ்ரீப்ரேமிகவரதன்


ஆகஸ்டு 18 , 2012 –ஆஞ்சநேய உற்சவம்


ஆகஸ்டு 9-18 - திவ்யநாம சங்கீர்த்தனம்


ஆகஸ்டு 16 - குதிரை வாஹனம்




ஆகஸ்டு 9-18 - பல்லக்கில் புறப்பாடு


ஜூலை 20-28, 2012 - தஞ்சாவூர் ஸ்ரீமத் ராமாயண நவாஹ பூர்த்தியன்று நகரசங்கீர்த்தனம்





ஆகஸ்டு 15, 2012 – நிகுஞ்ஜோத்ஸவம்,
புல்லாங்குழல் இசை கலைஞர் பத்மஸ்ரீ Dr.N.ரமணி,
அலங்காரத்தில் ஸ்ரீ ப்ரேமிக வரதன்







ஆகஸ்டு 17 - ராதாகல்யாணம்



ப்ரும்மோத்ஸவத்தில் உபன்யாசம்





ஆகஸ்டு 14 - கோவிந்த பட்டாபிஷேகம்



ஆகஸ்டு 16 - ஜானவாசத்தில் ஸ்ரீமாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதன்




ஜூலை 27, 28, 2012 – சென்னை GOD ஸம்ஸ்க்ருதி 2012 விழா – ராமானுஜம்ஜி மற்றும் நம் சத்சங்கத்தை சேர்ந்த ஹரிஹரன்ஜி, மணிகண்டன்ஜி





ஆகஸ்டு 7, 2012 – திருநாங்கூர் ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலையில் பூர்த்தி பரீக்ஷை





ஆகஸ்டு 15 – சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை தூத்துக்குடி மற்றும் குளோபல் ஆர்கனைசேஷன் பார் டிவினிடி இந்தியா டிரஸ்ட் சார்பாக – மஹாரண்யம் கிராம அரசு பள்ளியில் பரிசளிப்பு விழா;
டாக்டர் ஆ.பாக்யநாதன் மற்றும் தூத்துக்குடி கண்ணன் – மாலா தம்பதியினர்



ஆகஸ்டு 15 – சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை மற்றும் காட் இந்தியா டிரஸ்ட் சார்பாக – வெள்ளரை கிராம அரசு பள்ளியில் குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதி அமைப்பு

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:18 செப்டம்பர் 2012 கானம்:2

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே**

ஞானத்தை அடைய என்ன விதமான உபாயங்களை கைக்கொள்ளலாம் என்பதில் முயற்சியை அறவே விட்டு விட வேண்டும்; சாதுக்கள் வசிக்கக்கூடிய இடத்திலேயே நிரந்தரமாக வசிக்க வேண்டும்; அங்கும் இங்கும் எங்கும் அலையக்கூடாது; மஹான்கள் சொல்லக்கூடிய தங்கள் (கிருஷ்ணன்) கதையை மனம், வாக்கு, காயம் மூன்றையும் ஈடுபடுத்தி சிரத்தையுடன் கேட்க வேண்டும்; இப்படி ஜீவித்து வருவார்களேயானால், மூன்று உலகிலும் உள்ள ஒருவராலும் வெல்ல முடியாதவராக, தாங்கள் இருந்தாலும் இவர்களால் வெல்லப்பட்டு விடுகிறீர்.

**– ப்ரும்மஸ்துதி –**

**ஸ்ரீமத்பாகவதம் – 10.14.3**

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர் – 198 | 3 |
| மதுர யாத்திரை | 7 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 11 |
| பாகவத பழம் – 30 | 13 |
| ஸ்ரீசுதர்சன சதகம் | 17 |
| ஆலய தரிசனம் | 33 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 36 |
| ப்ருந்தாவன கண்ணன் | 42 |
| மாலே மணிவண்ணா | 44 |
| அப்பாலுக்கு அப்பால் | 46 |

# ஸ்ரீப்ரேமிகவரதன்

## மீது ஒரு பக்தரின் கீர்த்தனம்

–17.8.2012 ராதாகல்யாண மஹோத்ஸவத்தன்று சமர்ப்பிக்கப்பட்ட பாடல்.

ராகம் : சிந்துபைரவி                தாளம் : ஆதி

பல்லவி

மனக்கவலை தீர்க்கும் ஸ்ரீமாதுரிரமணன்
மஹாரண்யம் கோயில் கொண்ட ப்ரேமிகவரதன்

அனுபல்லவி                (மனக்கவலை ...)

தினம் ஒருமுறையேனும் திருமலரடி நினைந்து
துதிப்போர்க்கு அருள்புரிந்து துன்பமெல்லாம் தவிர்த்து

சரணம்                (மனக்கவலை ...)

புனிதமான ஸ்ரீ ராம, கிருஷ்ண நாமத்தை
புவிதனில் பாமரனும் உரைத்திடவே செய்து
பக்தி நெறி காட்டிய ஸ்ரீமுரளீதர
குருநாதன் போற்றி பணிந்திடும் இறைவன்                (மனக்கவலை ...)

அட்டை: ஆகஸ்டு 9–18, 2012 – மதுரபுரி ஆஸ்ரமம் – ஸ்ரீப்ரேமிக வரதனின் 19வது வருட ப்ரும்மோத்ஸவம் – முன் அட்டை – நந்தோத்ஸவம், பின் அட்டை – ரதோத்ஸவம்



# மதுரமான
# மஹனீயர் - 198

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

நம் சத்சங்கத்தை சேர்ந்த, திரு.சுந்தர்ராமன்(சுந்தர்) கும்பகோணத்தை பூர்வீகமாக உடையவர். அவரது சகோதரர்களும், சகோதரிகளும் ஸ்ரீஸ்வாமிஜியின் மீது மிகுந்த பக்தி கொண்டவர்கள். திரு.சுந்தர், குருநாதரை தான் சந்தித்த பொழுது நடந்த சில நிகழ்வுகளையும், தன் வாழ்வில் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளால் நடந்த சில சம்பவங்களையும், என்னுடன் பகிர்ந்து கொண்டார். அதையே நான் இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

பாஸ்கர க்ஷேத்திரமான குடந்தையில் பிறந்த திரு.சுந்தர், 1988இல் மேற்படிப்பிற்காக சென்னை வந்தார். சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தார். அப்பொழுது அவர் தன் நண்பர்களுடன், முதன்முறையாக, காஞ்சி மஹாபெரியவர்கள் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளை தரிசிக்க சென்றிருந்தார்.

அங்கு, மஹாபெரியவர்களை தரிசிக்க ஏராளமான பக்தர்கள் கூடியிருந்ததால், அவரை அருகாமையில் தரிசிக்க இயலவில்லை. அதனால், வருத்தத்துடன் சென்னைக்கு திரும்பினார். பிறகு இரண்டொரு நாட்களில், அவர் தங்கியிருந்த இடத்தில் வேலை பார்த்த ஒரு சிறுவன் "மேல்மாடியில் ஒரு இளம் வயது ஸ்வாமிகள் உள்ளார். அவர் தினமும் இரவு பகல் பாராமல் ஜபமும், தியானமும் செய்து கொண்டிருப்பார்" என்று கூறினான்.

மேலும் அச்சிறுவன் "ஒருமுறை அந்த ஸ்வாமிகள் என்னிடம், காஞ்சி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் திருவுருவப்படத்தை சுவரில் பொருத்த ஒரு கார்பென்டரை கூட்டி வர என்னை பணித்தார். அதற்கு நான் முற்படுவதற்குள், ஒருவர் "ஆணி அடிப்பதற்கு ஆள் வேண்டும் என

கேட்டீர்களாமே" என்று சொல்லியவாறு அங்கு வந்து வேலையை முடித்து சென்றார்" என்று தனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் சுந்தரிடம் பகிர்ந்து கொண்டான்.

இதை கேட்ட சுந்தருக்கு, இரவு 10.30மணி ஆனபொழுதும் உடனடியாக அவரை தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு அந்த சிறுவனுடன் சென்றார். அவர் சென்றபொழுது, நம் ஸ்வாமிஜி அவர்கள், ரமணமஹரிஷிகள் அருளிய "அருணாசல அக்ஷரமணமாலை" பாடலை பாடி கொண்டிருந்தார்.

சுந்தர் சென்றவுடன், ஸ்ரீஸ்வாமிஜி அவரிடம் அன்புடன் உரையாடினார். அக்கணமே அவர் மனதில் ஸ்ரீஸ்வாமிஜி மீது, பூஜ்யதா பாவம் ஏற்பட்டதுடன், காஞ்சி மஹாஸ்வாமிகள்தான் தனக்கு சத்குருநாதரை காண்பித்து கொடுத்துள்ளார்கள் என்பதாக உணர்ந்தார்.

அன்று முதல், சுந்தர் தினமும் ஸ்ரீஸ்வாமிஜியை தரிசித்து வந்தார். ஸ்ரீஸ்வாமிஜி பல்வேறு தலங்களுக்கு சென்று தியானம் செய்வது வழக்கம். அப்பொழுது அவருடன் பிரயாணிக்கும் பாக்கியம் சுந்தருக்கும் கிடைத்தது.

ஒருமுறை, கர்நாடக மாநிலத்தில் உள்ள உடுப்பி க்ஷேத்திரத்திற்கு, ஸ்ரீஸ்வாமிகளுடன் சுந்தர் சென்றிருந்தார். அங்கு சென்றதிலிருந்து, ஸ்ரீஸ்வாமிகள் சமாதி நிலையில் இருந்து வந்தார்கள். திடீரென இரவு சமாதி கலைத்து, கோவிலுக்கு செல்லலாம் என கூட்டி சென்றார்கள். அங்கு சென்றபொழுது பூஜை செய்யும் அர்ச்சகர் ஒருவர், ஸ்ரீஸ்வாமிகளிடம் வந்து தமிழில், "ஏன் கிருஷ்ணரை தரிசிக்க காலையில் வரவில்லை. இங்கு எதற்காக வந்தீர்கள்? கிருஷ்ணரை தரிசிக்காமல் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?" என்று ஆவேசத்துடன் வினவினார். ஊரோ புதியது. அங்கு இருக்கும் ஒருவருக்கும் ஸ்ரீஸ்வாமிகளை பற்றி தெரியாது. முன்பின் தெரியாத அர்ச்சகர் ஒருவர், இப்படி உரிமையுடன் பழகியவர் போல், கேள்வி கேட்டது சுந்தருக்கு ஆச்சரியமாக இருந்தது. அதனால் அவர் ஸ்ரீஸ்வாமிகளிடம்

"அர்ச்சகர் உங்களை பார்த்து ஏன் இப்படி கேட்டார்?" என்று வினவினார். ஸ்ரீஸ்வாமிகள் அதற்கு, பகவான் அர்ச்சகர் மூலமாகவும் பேசுவார் என்று விளக்கினார்.

மறுநாள் காலை, ஸ்ரீஸ்வாமிஜியும் அன்பர்களும் கோவிலுக்கு சென்றபொழுது, அங்கு வேதபாராயணமும் பஜனைகளும் நடந்து கொண்டிருந்தது. அதில் வேதபாராயணம் செய்து கொண்டிருந்த ஒருவர், ஸ்ரீஸ்வாமிஜியை பார்த்தவுடன் "சந்திரசேகர சந்திரசேகர சந்திரசேகர பாஹிமாம்" என்று பாட ஆரம்பித்து விட்டார். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி "இங்கேயும் மஹாபெரியவர்கள் எனக்கு ஆசீர்வாதம் செய்து விட்டார்" என்று சுந்தரிடம் கூறினார். இது ஒரு மறக்க முடியாத அனுபவம் என்கிறார் சுந்தர்.

ஸ்ரீஸ்வாமிஜியோ அக்காலத்தில் ஸதா மஹாஸ்வாமிகளின் தியானத்திலேயே இருப்பார்கள். உடுப்பி கிருஷ்ணர் கோயிலிலோ, கிருஷ்ண கீர்த்தனமும், வேதபாராயணமும் நடந்து கொண்டிருந்தது. அப்படி இருக்கையில், முன்பின் தெரியாத இடத்திலும், மஹாஸ்வாமிகளுக்கு பிடித்த வேதபாராயணம் செய்யும் ஒருவர், திடீரென்று ஸ்ரீஸ்வாமிஜியை பார்த்தவுடன் மஹாஸ்வாமிகளின் பெயரை குறிப்பிட்டது ஆச்சரியமல்லவா! ஸ்ரீஸ்வாமிஜிக்கு எப்போதும் மஹாஸ்வாமிகள் மீது இருந்த ஆழ்ந்த தியானமும், மனோபாவமும் மற்றொருவரை பற்றி கொண்டு விட்டது!

சுந்தர் மற்றொரு விஷயத்தையும் சொன்னார். ஒருசமயம், அவரது மூத்த சகோதரார், திரு.பாபுவின் வலது கன்னத்தில் திடீரென பெரிய கட்டி உருவானது. டாக்டர்கள் அது கேன்சர் கட்டியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார்கள். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜியோ "ஹோமியோபதி டாக்டரிடம் சென்று சிகிச்சை எடுத்துக்கொள். இது அறுவை சிகிச்சை இன்றி தானாகவே குணமாகி விடும்" என்று அனுக்ரஹம் செய்தார். அதேபோல் குருநாதரின் கிருபையால் ஒரே மாதத்தில் அந்த கட்டி மறைந்தது.

சுந்தரின் இளம்வயதிலேயே, அவரது தாயார், குருநாதர் திருவடிகளை அடைந்தார். அப்பொழுது குருநாதர் "கவலைப்பட வேண்டாம். உங்கள் தாயாருக்கு பிள்ளையார் பக்தி அதிகம். அவர் விருப்பப்படி அவரை பிள்ளையார் லோகத்தில் சேர்த்து விட்டேன்" என்று ஆறுதல் கூறினார். சுந்தரின் தாயார் பிள்ளையார் லோகம் சென்றதற்கு சான்றாக, சில வருடங்கள் கழித்து, அவர் மூத்த சகோதரிக்கும் பிறகு மூத்த சகோதரருக்கும், பிள்ளையார் சதுர்த்தி தினத்தன்றே திருமணம் நடந்தேறியது. அப்பொழுது "மஹாத்மாக்கள் கூறும் ஒவ்வொரு வாக்கும் சத்தியம்" என்பதை சுந்தர் உணர்ந்தார்.

அன்று முதல் இன்று வரை தாயாய், தந்தையாய், தெய்வமாய் இருந்து எங்கள் குடும்பத்தை வழி நடத்தி செல்பவர் சத்குருநாதர்தான் என்கிறார் சுந்தர்.

---

சமீபத்தில் மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய ஒருவர் வந்திருந்தார். "நான் காசி, கயா, அலஹாபாத், ராமேஸ்வரம் போன்ற க்ஷேத்ரங்களுக்கு யாத்திரை செய்து விட்டு வருகின்றேன். எல்லா இடங்களிலும் நிறைய கோதானம், அன்னதானம், வஸ்திர தானம், ஸ்வர்ண தானம் மற்றும் பூதானம் போன்ற தானங்களும் செய்தேன்" என்று சொன்னார். அப்படி சொல்லி விட்டு, "இந்த தானங்கள் செய்தது போதுமா? அல்லது தாங்கள் வேறு ஏதாவது தானம் செய்ய சொன்னாலும் செய்கின்றேன்" என்றார். அவர் இப்படி சொன்னவுடன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், "நேரே பகவானின் சன்னதிக்கு செல். அங்கு சென்று, நான் இவ்வளவு தானங்கள் செய்தேன் என்ற எண்ணத்தை பகவானிடம் தானம் செய்து விடு" என்றார்.

–டாக்டர். ஆ.பாக்யநாதன்

# விருத்திம் கர்நாடகே கதா

## 8

–ராமானுஜம்ஜி

இந்த மதுர யாத்திரையில் பார்த்தவை அனைத்துமே புதிய இடங்கள் என்பதால், எங்களிடையே ஆர்வமும் உற்சாகமும் அதிகமாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த யாத்திரை ஸ்ரீஸ்வாமிஜியுடன் அல்லவா கிடைத்து இருக்கிறது; அதனால் எங்களுக்கு, இந்த யாத்திரை முடிய வேண்டும் என்ற ஆசையே இல்லை. எங்களுடைய இலக்கு என்னவோ இந்த பயணம்தான்! இங்கு இலக்கே பயணமாகியது! நமது குருநாதர், பாகவத தர்மமே, பரம ஆனந்தமான கிருஷ்ணனிடம் கொண்டு சேர்க்கும் என்றும், கிருஷ்ணனை பாடி ஆடி கொண்டாடும் இந்த பாகவத தர்மமே, பரம சுகமாய் இருக்கிறது என்றும் கூறுவார்! அதேபோல நம் குருநாதருடன் செல்லும்போது புதிய திவ்யமான க்ஷேத்ரங்களின் தரிசனத்தை காட்டிலும் அவருடன் மேற்–-கொள்ளும் பயணமே, பரம சுகமாய் அல்லவோ இருக்கிறது!

அவர் பேசி கொண்டே வருகையில் அதை கேட்பதில்தான் எவ்வளவு ஆனந்தம்! அதனால்தான், எங்களுக்கு புதிதாக எதையாவது பார்த்து கொண்டே இருக்க வேண்டும் என்று, தோன்றி கொண்டே இருந்தது.

ஸ்ரீஸ்வாமிஜியை பற்றி அறிந்தோருக்கு, அவருக்கு மஹான்களின் மேல் கொண்டுள்ள ஈடுபாடு பற்றி நன்கு தெரியும். ஸ்ரீபோதேந்திர ஸ்வாமிகள், ஸ்ரீசதாசிவ ப்ரும்மேந்திரர், ஸ்ரீஆத்ம போதேந்திரர், ஸ்ரீரகோத்தம ஸ்வாமிகள், ஸ்ரீபின்னவாசல் பெரியவர்கள், வடகோடி பிருந்தாவனம், ஸ்ரீஅமரேந்திரபுரம் ராமச்சந்திர தீர்த்தர் இப்படி பல சம்பிரதாயங்களில் வந்த பற்பல மஹான்களின் அதிஷ்டானங்களில், அவர் இளமையிலேயே பல மணி நேரம் தியானத்திலேயே இருப்பார்கள். அந்த மஹான்களை பற்றி பேசுகையில் எல்லாம், அவருக்கு அந்த மஹான்களிடம் இருக்கும் பிரியமும் ஈடுபாடும் நன்கு புரிய வரும். வரதபுராவை

சேர்ந்த ஸ்ரீதரஸ்வாமி அதிஷ்டானத்தை, அவர் பார்க்க சென்றதும் அப்படிப்பட்டதுதான்.

கோகுலாஷ்டமி, ராதாஷ்டமி போன்ற தினங்களில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பூஜையில் ஆழ்ந்து ஈடுபடுகையிலும், அவர் பேச்சிலும் நடை, உடையிலும் கூட அவரது பாவனை நன்கு வெளிப்படும் என்பதை முன்பே பார்த்தோம். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்கு ஒரு ஆழ்ந்த சிந்தனை வரும்பொழுது, அதன்பின் வரும் சம்பவங்களும், அதை ஒட்டியே நடக்கும் என்பதையும் மறுநாள் எங்களால் பார்க்க முடிந்தது. அது புரிவதற்கு எங்களுக்கு அன்றைய முழு பொழுதும் ஆனது.

மறுநாள் 28ஆம் தேதி, பனிப்படர்ந்த காலைவேளையில், ராமசந்திரா மடத்தில், ஸ்ரீஸ்வாமிஜி, அதிகாலையிலேயே எழுந்து தயாராக இருந்தார். காலையில், ராமச்சந்திரா மடத்து ராமர் கோவிலிற்கு, ஸ்ரீஸ்வாமிஜியுடன் நீண்ட நடையாக சென்றோம். அந்த மடத்து பீடாதிபதியிடம் இருந்த ஒரு ரத்தின கணபதி மூர்த்தியை பற்றி ஸ்ரீஸ்வாமிஜி பேசிக்கொண்டு இருந்தார். அது ஒரு அழகிய கணபதி. எந்த கோலத்தில் இருந்தாலும், அழகாய் இருக்கும் கணேசரை பற்றி, தேனினிய சொற்களில் ஸ்ரீஸ்வாமிஜி பேசி வந்தது பாலும் தேனும் போல் கலந்து இனித்தது.

காஞ்சி மஹாஸ்வாமிகள், விநாயகரிடம் கொண்டிருந்த அபார பிரியத்தை பற்றி, ஸ்ரீஸ்வாமிஜி பேசிக்கொண்டு வந்தார்கள். என்ன ஒரு பிரியமும், பக்தியும் அந்த மஹானுக்கு இருந்திருக்கிறது! காஞ்சி பெரியவர்கள் ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், யாத்திரை செல்லும் முன், எப்பொழுதும் கணபதி முன் சிதர் தேங்காய் உடைக்க சொல்வார். ஒருமுறை அவர் காஞ்சியில் காமாக்ஷி அம்மன் புறப்பாட்டை தரிசிக்க செல்லும் முன் பிள்ளையாரிடம் பிரார்த்தித்து விட்டு சென்றார். அவர் பிரார்த்தித்த மறுகணம் புறப்பாட்டில் இருந்த யானை ஒன்று, மேற்கொண்டு புறப்பாடு செல்ல விடாமல் தடுத்து விட்டது. யானை கணபதியின் அம்சம்தானே! மஹாபெரியவர்கள் அங்கு வந்து சேர்ந்த பின்னர்தான் அந்த யானை ஸ்வாமி புறப்பாடு தொடர்ந்து நடைபெற வழி விட்டது.

ஸ்ரீஸ்வாமிஜியின் இளமை காலங்களை பற்றி, பேச்சு யதேச்சையாக திரும்பியது. இன்று கடலூர் மஞ்சக்குப்பத்தில் நாமத்வாராய் இருக்கும், ஸ்ரீசாவித்ரி சதனம்தான், ஸ்ரீஸ்வாமிஜி பிறந்து வளர்ந்த வீடு. நாமத்வார் இருக்கும் தெருவிலேயே சித்தி விநாயகர் கோவில் இருக்கிற து. நாமத்வாருக்கு செல்பவர்களிடம் ஸ்ரீஸ்வாமிஜி, இந்த கோவிலை பற்றி விசாரிப்பதுண்டு. தமது பள்ளிப்பிராயத்தில், இந்த பிள்ளையார் கோவிலை, ஸ்ரீஸ்வாமிஜி தரிசிக்க அடிக்கடி செல்வது உண்டு. இந்த கணபதி கோவில் திருப்பணி, இப்பொழுது நடைபெற்று வருவது பலருக்கும் தெரியும். ஸ்ரீஸ்வாமிஜி அந்த பிள்ளையாரை பற்றியும் காலையில் நினைவுகூர்ந்தார். மேற்கொண்டும், ஸ்ரீஸ்வாமிஜி பிள்ளையார் பற்றியே இனிமையாக பேசிக்கொண்டே வந்தார்.

ஸ்ரீஸ்வாமிஜி, இளமையில் கும்பகோணத்திற்கு அருகில் இருக்கும் திருமங்கலக்குடி எனும் க்ஷேத்திரத்திற்கு, அடிக்கடி செல்வார்கள். அங்கு உள்ள ஒரு சிறிய விநாயகர் கோவிலில், ஸ்ரீஸ்வாமிஜி ஒருமுறை பூஜை செய்ய ஆசைப்பட்டார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அங்கு சென்றபொழுது, ஒரு சிறுவன், எங்கிருந்தோ வந்து இருந்தான். அவன் ஸ்ரீஸ்வாமிஜியின் பூஜைக்கு தேவையான பூஜா திரவியங்களை அங்குமிங்கும் ஓடி சேகரித்து கொடுத்தான். அவனை பார்த்ததில் இருந்து, ஸ்ரீஸ்வாமிஜியின் மனதில் ஒரு பூரிப்பும் பாசமும் இருந்தது. பூஜை நன்கு முடிந்தவுடன், அந்த பையன், ஸ்ரீஸ்வாமிஜியிடம் சொல்லிக்கொண்டு கிளம்பினான். அவன் கிளம்பி செல்கையில், ஸ்ரீஸ்வாமிஜி தமது அன்பர்களிடம் அந்த பையனின் பெயரை விசாரிக்க சொன்னார்கள். அவன் ஒரு பத்து அடிகள், அதற்குள் சென்று விட்டான். அன்பர்கள் அவனை கூப்பிட்டு, "உன் பெயர் என்ன?" என்று கேட்டார்கள். அவன் சகஜமாக நடந்தவாறே திரும்பி பார்த்தான். அவன் முகத்தில், ஒரு புன்னகை தவழ்ந்தது. தன் சிறு வாயை திறந்து, "விக்னேஷ்" என்றான். மேற்கொண்டு விசாரிப்பதற்குள் வந்தது போலவே, சிறுவன் கிடுகிடு என்று நடந்து கண்களிலிருந்து மறைந்து போனான். அப்புறம், அவன் மேல், தனக்கு பொங்கி வந்த பிரியத்தை, ஸ்ரீஸ்வாமிஜி நினைவு கூர்கையில்தான், இந்த "விக்னேஷ்" யாராக இருக்கும் என்று புரிய வந்தது.

(மதுர யாத்திரை தொடரும்)

ஸ்ரீமத் பாகவதத்தில் பிரலம்பாசுரன் பலராமரை தூக்கி கொண்டு ஓடும்போது பலராமர் பயந்து கண்ணனை அழைக்க, அப்பொழுது கண்ணன், "பலராமா! நீ சாதாரணப்பட்டவன் அல்லன்! உன் ஸ்வஸ்வருபத்தை த்யானம் செய்" என்று கூறுகிறான். அடுத்த க்ஷணமே, "அத ஆகதஸ்ம்ருதி: அபய:" பலராமர் தான் யார் என்பதை உணர்ந்து, பயத்தை துறந்து, பிரலம்பனை வதம் செய்கிறார். இதிலிருந்து, ஒருவன், வாழ்க்கையில் ஒரு பெரிய சவாலை சந்திக்கும் போது, தன் ஆத்மஸ்வரூபத்தை த்யானம் செய்வதால் மனவலிமையும், சக்தியும் பெற்று, எத்தகைய சவாலையும் சந்தித்து வெற்றி பெறலாம் என்று நமக்கு தெரிகிறது.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



## *சிங்கப்பூரில் நாமத்வார்*

நம் ஸ்ரீஸ்வாமிஜியின் பூரண அருளாசிகளுடன் நவம்பர் 8, 2012 அன்று, சிங்கப்பூரில் அமைய உள்ள புதிய நாமத்வாரில், மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதன் திவ்ய தம்பதியினர் எழுந்தருள உள்ளனர். ஸ்ரீஜெயச்சந்திரன் –ஸ்ரீமதி ஹரிலக்ஷ்மி ஜெயச்சந்திரன் தம்பதியினர், இதில் கலந்துகொண்டு, சிறப்பிக்க உள்ளனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பிரதிநிதியாக, டாக்டர்.ஆ.பாக்யநாதன் சென்னையிலிருந்து சென்று நாமத்வாரை துவக்கி வைக்க உள்ளார். சிங்கப்பூர் "காட்" அமைப்பை சேர்ந்த ஸ்ரீபாலசுப்ரமணியன் மற்றும் அன்பர்கள், இவ்விழாவிற்கான பணியை ஒருங்கிணைத்து செய்து வருகின்றனர்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: அவதார புருஷர்களுக்கு, தாங்கள் அவதார புருஷர்கள் என்பது அவர்களுக்கே கூட தெரியாமல் இருக்குமா?

பதில்: இருக்கும். மஹாபாரதத்தில் வருபவர்களான தர்மபுத்திரர், பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் - ஏன் துரியோதனன் உள்பட, எல்லோருமே ஒரு தேவதையின் அம்சமாக அவதாரம் செய்தவர்கள்தான். ஆனால், அவர்களுக்கு இந்த விஷயம் தெரியாது. பகவான் க்ருஷ்ணருக்கு மட்டுமே, தான் அவதார புருஷர் என்பதும் தெரியும். மற்றவர்கள், யார் யார் எந்த எந்த தேவதைகளின் அவதாரம் என்பதும், அவருக்கு மட்டுமே தெரியும்.

கேள்வி: ஒரு பிராணி இறக்கும் போது, செத்து போச்சு என்கிறார்களே! போவது எது?

பதில்: "சத்து" என்றால் சைதன்யம் அல்லது பகவான். மரணம் நேரிடும்போது, இந்த சைதன்யம், உடலை விட்டு நீங்கிவிடுகிறது. ஆகையால், சத்து உடலை விட்டு போய்விடுகிறது. இதுவே மருவி, மரணம் அடைந்தவர்களை செத்து போய்விட்டான் என்று கூறுகிறார்கள்.

கேள்வி: வேதாந்தத்தை கொஞ்சம் படித்த எனக்கு, ஒரு நாமத்தை மட்டும் சொல்லுவதால் மோக்ஷம் கிட்டும் என்பது ஆச்சரியமாக இருக்கிறதே!

பதில்: வேதாந்தமார்கத்தில் உள்ள சன்யாசிகளுக்கே பிரணவத்தை மட்டும் ஜபம் செய்துகொண்டு, பிரம்மவிசாரம் மட்டும் செய்து வந்தாலே, ஆத்மசாக்ஷாத்காரம் ஏற்படும் என்று கூறப்பட்டு இருக்கும்போது, பகவன்நாமாவை மட்டும் சொல்லிவந்தால் ஆத்ம சாக்ஷாத்காரம் ஏற்படும் என்பதில் ஐயம் என்ன?

* நாமகீர்த்தனம் செய்யும்பொழுது, நாம் நம்பிக்கையுடன் சொல்கின்றோமா அல்லது நம்பிக்கையில்லாமல் சொல்கின்றோமா என்பது தெரியாது. ஆனால், நாமகீர்த்தனம் செய்பவர்களை, பகவான் பக்தன் என்று நம்புகின்றான். அதனால்தான், அஜாமிளன் போன்றவர்களையும் கரையேற்றுகின்றான்

* ஒரே நேரத்தில், நம் வாயினால் ஒரே ஒரு நாமத்தைத்தான் சொல்ல முடியும். ஆனால் ஒரு இடத்தில், ஆயிரம் பக்தர்கள் இருந்து நாமகீர்த்தனம் செய்தால், அத்தனை பேர் செய்யும் கீர்த்தனங்களையும் காது கேட்கின்றது. அதனால், நமக்கு ஆயிரம் நாமங்கள் சொன்ன பலன் ஒரு க்ஷணத்தில் கிடைத்து விடுகின்றது.

–மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com
www.buddiesinfotech.com



# பாகவத பழம்

**பாகம் 2 – அத் 14**

–ஸ்ரீஸ்வாமிஜி (30)

**அத்யாயம் 14**

துவாரகைக்கு, வாஸுதேவனையும் அவர்களுடைய பந்துக்களையும், பார்த்துவரச் சென்ற அர்ஜுனன் ஏழுமாதங்களாகியும் திரும்பவில்லை. அப்பொழுது, பல துர்நிமித்தங்களை தர்மபுத்திரர் பார்த்தார். ருது காலங்களெல்லாம் மாறி நடந்தது. ஒவ்வொரு குடும்பங்களிலும், அனாசாரமும் குடும்பக்கலக்கங்களும் தலைவிரித்து ஆடின. உடனே பீமனைப் பார்த்து கவலையுடன் பேசலானார்.

எந்த வாஸுதேவனால், நாம் இன்று ராஜாவாக கௌரவமாக இருக்கின்றோமோ, அந்த வாஸுதேவன், தன்னுடைய அவதாரத்தை முடித்து கொள்ளக்கூடிய காலம் வந்துவிட்டதா என்ன? ஆகாயத்திலும், சரீரத்திலும் உண்டாகக்கூடிய பல விஷயங்கள் என்னுடைய புத்தியை கலக்குகின்றன,'' என்றபடி தனக்கு ஏற்படும் துர்நிமித்தங்களைக் கூறலானார்.

எனது இடது துடை, கண், கை, அடிக்கடி துடிக்கின்றன. ஹ்ருதயத்தில் ஒரு பயம், நடுக்கம் ஏற்படுகின்றது. இது எனக்கு சமீபத்தில் ஏற்படப் போகும் ஒரு அனிஷ்டத்தைச் சொல்கின்றது. ஓநாய், நெருப்பைக் கக்கும், உதித்து வரும் சூரியனைப் பார்த்து ஊளையிடுகின்றது. நாய், பயமில்லாமல் என்னைப் பார்த்து குரைக்கின்றது. பசு என் இடது பக்கம் செல்கின்றது. கழுதை மற்றவைகள் வலது பக்கம் செல்கின்றது. என் குதிரைகள் அழுகின்றன. புறாவை யமதூதனாகவே பார்க்கின்றேன். காக்கையும், கோட்டானும் தூக்கம் அற்றவைகளாய் கத்திக்கொண்டே இருக்கின்றன. திசைகளில் புழுதி படிந்திருக்கின்றது. பூமி ஆடுகின்றது. மேகம் இல்லாமல் இடி

விழுகின்றது. காற்று பெரிய சப்தத்துடன் புழுதிக் கூட்டத்தை வாரி இறைக்கின்றது. மேகங்கள் ரத்தத்தைக் கொட்டுகின்றன. சூரியன் மங்கியுள்ளது. கிரஹங்கள் ஒன்றுக்கொன்று கலகம் செய்து கொள்கின்றன. ஆஹிதாக்னீயின் அக்னி ஜ்வலிப்பதில்லை. கன்றுகள் பால் அருந்துவதில்லை. பசுக்கள் பால் சுரப்பதில்லை. எருதுகள் சந்தோஷிக்கவில்லை. தேவதா பிரதிமைகள் அழுவதுபோல் தோன்றுகின்றது. அவற்றிலிருந்து வியர்வை வழிந்தோடுகின்றன. கிராமங்கள், நகரங்கள், நந்தவனங்கள், ஆசிரமங்கள் சோபையை இழந்துள்ளன. வா ஸுதேவனது காலடியை இழந்ததனால், இந்த பூமியில் இத்தகைய துர்நிமித்தங்கள் தோன்றுவதாகவே நான் அறிகின்றேன்''.

இப்படி தர்மபுத்திரர் கூறிக்கொண்டிருக்கும் பொழுதே, அர்ஜுனன் துவாரகையிலிருந்து திரும்பி வந்தான். எப்பொழுதும் தர்மபுத்திரரை தனிமையில் வணங்கும் அர்ஜுனன், நண்பர்களின் நடுவே, அவருடைய காலில் விழுந்து நமஸ்கரித்தான். அவனுடைய முகத்தில் சோபை இல்லை. மனதும் கலங்கியிருந்தது. கண்களிலிருந்து சோகமாக கண்ணீர் வந்து கொண்டே இருந்தது. அப்படி விழுந்த அர்ஜுனனைப் பார்த்து, தர்மபுத்திரர், தனித்தனியாக துவாரகையில் உள்ள முக்கியமானவர்களின் பெயர்களையும் அவர்களுக்குரிய கௌரவத்தையும் கூறி அவர்கள் சௌக்கியமா என்று வினவினார். இப்படிக் கேட்டு முடித்தவர் உனக்கு உடம்பு சரியில்லையா? நீ ஏன் ஏதோ போல் இருக்கின்றாய்,'' என்று கூறியபடி கீழ்க்கண்டவாறு வினாக்களைத் தொடுத்தார்.

வெகுநாட்கள், நீ துவாரகையில் தங்கியிருந்ததால் அவமதிக்கப்பட்டாயா? அன்பு இல்லாத, கடுமையான சொற்களால் உன்னை யாராவது திட்டினார்களா? நீ யாருக்காவது ஏதாவது தருகின்றேன் என்று கூறி, தர முடியாமல் போய்விட்டதா? சரணமாக அடைந்தவர்களைக் காப்பாற்ற முடியாமல் போயிற்றா? அடையத் தகுந்த பெண்ணை அடையவில்லையா? அடையக்கூடாத பெண்ணை அடைந்தாயா? வழியில் உனக்கு சமமில்லாதவர்களால்,

தோற்கடிக்கப்பட்டாயா? முதியவர்கள், குழந்தைகளை விட்டுவிட்டு உணவு உட்கொண்டாயா? பொறுமையில்லாமல் செய்ய அவசியமில்லாததை செய்து விட்டாயா? அல்லது எல்லோராலும் பழிக்கப்படக்கூடிய கார்யத்தைச் செய்துவிட்டாயா? மிக ப்ரியமானவனுமான, அந்தரங்கனுமான கிருஷ்ணனை விட்டுப் பிரிந்து விட்டேன் என்று எண்ணுகிறாயா?'' என்று கேட்டார். இதைத்தவிர, மனவருத்தத்திற்குக் காரணம் வேறு எதுவும் இருக்க நியாயமில்லை'' என்று கூறி முடித்தார்.

> யுத்தத்தில் எவ்வளவோ கணைகளைக் கண்டு கலங்காத அர்ஜுனன் இப்பொழுது தர்மபுத்ரரின் கேள்விக்கணைகளால் கலங்கி நின்றான்.

**அத்யாயம் 15**

தர்மபுத்திரர், இப்படியாக பல கேள்விக்கணைகளால் அர்ஜுனனை துளைத்து எடுத்தார். யுத்தத்தில், இதுவரை எதிரிகளின் கணைகளையே கண்டிருந்த அர்ஜுனன், இப்பொழுது முதல் முறையாக, தர்மபுத்திரரிடமிருந்து கேள்விக் கணைகளை சந்தித்தான். யுத்தத்தில் எவ்வளவோ கணைகளைக் கண்டு கலங்காத அர்ஜுனன், இப்பொழுது, தர்மபுத்ரரின் கேள்விக்கணைகளால் கலங்கி நின்றான். கலங்கியதோடு மட்டுமல்லாமல், குரல் தழுதழுத்தது. ஹ்ருதயம் நடுநடுங்கியது. தன் வாழ்க்கையில் அழுதே இராத அர்ஜுனன், இப்பொழுது அழவும் ஆரம்பித்தான். நம் குடும்பத்தில் ஒருவனாக பழகி நம்மை எல்லாம் மாமா, மாமி, அத்தை, அத்தங்கா என்று சொந்தம் கொண்டாடிய கிருஷ்ணன் நம்மையெல்லாம் வஞ்சித்து விட்டான். யார் நமக்காக தேர் ஓட்டினானோ, குதிரையை குளிப்பாட்டினானோ, தூது சென்றானோ அவன் வேதத்தினாலும் தேடி அறியமுடியாத வாஸுதேவனாம். அளப்பறிய தேஜஸ் உடைய அவன், நம்மை மாயையால் மயக்கி, அவன் பகவான் என்று புரியாதவாறு செய்துவிட்டான். ஒருவனுடைய உயிர் பிரிந்துவிட்டால், அவனுடைய சரீரத்தை உற்றார் உறவினர்கள்

கூட எப்படி பிணம் என்று சொல்லி விடுவார்களோ, அப்படி பகவான் இல்லாத பூமி இப்பொழுது ஆகிவிட்டது'' என்றான்.

தர்மபுத்திரரை பார்த்து, "அண்ணா, அந்த பகவானால் நாம் அடைந்த நன்மைகள் ஒன்றா? இரண்டா? நாம் அடைந்த அத்தனை நன்மைகளுக்கும் அவன் ஒருவனே காரணம் அல்லவா!" என்றான் அர்ஜுனன். (கனியும்)

---

## GOD ஸம்ஸ்க்ருதி 2012 விழா – சென்னை

**ஜுலை 22, 29** தேதிகளில் காட் இந்தியா டிரஸ்ட் சார்பில் **"காட்" ஸம்ஸ்க்ருதி 2012 விழா சென்னையில்** பாரதீய பாரம்பரியத்தை கொண்டாடும் விதமாக நடைபெற்றது. இதில் இடம்பெற்ற பல போட்டிகளில் 32பள்ளிகள் மற்றும் 10 கல்லூரிகளை சேர்ந்த இளைய தலைமுறையினர் கலந்து கொண்டனர். ஓவியப்போட்டி, ஆடை அலங்கார போட்டி, வாழ்த்து அட்டை மற்றும் Tshirt Painting போட்டிகள் புதுமையாக இருந்தன. An eye for Divinity என்ற தலைப்பில் online photography போட்டி நவீன உலகத்தை எப்படி தெய்வீக கண்ணோட்டத்துடன் பார்ப்பது என்பதை காட்டுவதாக இருந்தது. கோவில் தலபுராணம், சிற்பக்கலை, பாரம்பரிய மருத்துவ குறிப்புகள் குறித்தும் போட்டிகள் இடம் பெற்று இருந்தன. உலக சகோதரத்துவம் மற்றும் மனித நேயத்தை வலியுறுத்தும் விதமாக இருந்த Taste of India என்ற தலைப்பில் அமைந்த ஓவியப்போட்டி, கைவினை பரிசுபொருள் போட்டிகளில் மாணவர்கள் தனித்திறமையை வெளிப்படுத்தினர்.

பாரம்பரிய புதிர் போட்டி (புராநவா) மற்றும் பல போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெற்ற கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு ராமானுஜம்ஜி, சென்னை "காட்" சத்சங்கத்தை சேர்ந்த ஹரிஹரன்ஜி, மற்றும் மஸ்கட் "காட்" சத்சங்கத்தை சேர்ந்த மணிகண்டன்ஜி பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். விழாவை டாக்டர்.ஜனனி வாசுதேவன் மற்றும் பல அன்பர்கள் மிக அழகாக ஒருங்கிணைத்து நடத்தி இருந்தனர். இவ்விழா இம்முறை குருநாதர் அருளால் சென்னையில் நடந்தாற்போலவே, வரும் ஆண்டுகளில் மற்ற இடங்களிலும் நடக்க உள்ளது.

# ஸ்ரீ ஸுதர்சந சதகம்

-ஸ்ரீ கூரநாராயண ஜீயர் அருளியது



(ஆகஸ்டு இதழ் தொடர்ச்சி)

**27.சுகம் பெற**

யாத்ரா யா த்ராதலோகா ப்ரகடித
        வருணத்ராஸமுத்ரே ஸமுத்ரே
ஸத்த்வாஸத்த்வா ஸஹோஷ்மா
        க்ருத ஸகருதகஸ்பந்ததாநா ததாநா
ஹாநிம் ஹா நிந்திதாநாம் ஜகதி
        பரிஷதாம் தாநவீநாம் நவீநாம்
சக்ரே சக்ரேசநேமிச்
        சமுபஹரது ஸா ஸப்ரபாவ ப்ரபா வ:

**28.பாப விமோசனத்திற்கு**

யத்ராமித்ராந் திதக்ஷேள ப்ரவிசதி
        பலிநோ தாம நிஸ்ஸீமதாம்நி
க்ரஸ்தாபஸ்தாபசீர்ண: ப்ரகுணிதஸிகதோ
        மௌக்திகைச் சௌக்திகேயை:
ராசிர் வாராமபாராம் ப்ரகடயதி புநர்-
        -வைரிதாராச்ரு பூரை:
வ்ருத்திம் நிர்யாதி நிர்யாபயது ஸ
        துரிதாந்யஸ்த்ரராஜப்ரதிர் வ:

**29.பாபம் சக்தி இழக்க**

கக்ஷ்யாதௌல்யேந கத்ரூ தநயபணமணீந்
        கல்யதீபஸ்ய யுஞ்ஜந்
பாதாளாந்த: ப்ரபாதீ நிகிலமபி தம:
        ஸ்வேந தாம்நா நிகீர்ய
தைதேயப்ரேயஸீநாம் வமதி ஹ்ருதி
        ஹதப்ரேயஸாம் பூயஸா ய:
சக்ராக்ரீயாக்ரதேசோ தஹது விலஸிதம்
        பஹ்வஸாவம்ஹஸாம் வ:

### 30.கீர்த்தி பிரகாசிக்க

க்ருஷ்ணாம்போதஸ்ய பூஷா க்ருதநயந
நயவ்யாஹதிர் பார்கவஸ்ய
ப்ராப்தாமாவேதயந்தீ ப்ரதிபடஸூத்ருசாம்
உத்படாம் பாஷ்பவ்ருஷ்டிம்
நிஷ்டப்தாஷ்டாபதஸ்ரீஸ்
ஸமமமரசமூகர்ஜிதைருஜ்ஜிஹாநா
கீர்திம் வ: கேதகீபி: ப்ரதயது
ஸத்ருசீம் சஞ்சலா சக்ரதாரா

### 31.மனம் கலங்காமலிருக்க

வப்ராணாம் பேதநீம் ய: பரிணதிம்
அகிலச்லாக நீயாம் ததாந:
க்ஷுண்ணாம் நக்ஷத்ரமாலாம் திசி திசி
விகிரந் வித்யுதா துல்யகக்ஷ்ய:
நிர்யாணே நோத்கடேந ப்ரகடயதி நவம்
தாநவாரிப்ரகர்ஷம்
சக்ராதீசஸ்ய பத்ரோ வசயது பவதாம்
ஸ ப்ரதிச் சித்தவ்ருத்திம்

### 32.ஜயம் பெற

நாகௌகச் சத்ரு ஜத்ரு த்ருடந
விகடிதஸ்கந்த நீரந்த்ரநிர்யத்
நவ்யக்ரவ்யாஸ்ரஹவ்யக்ரஸநரஸ
லஸஜ்ஜ்வாலஜிஹ்வாலவஹ்நிம்
யம் த்ருஷ்ட்வா ஸாம்யுகீநம் புநரபி
விததத்யா சிஷோ வீர்யவ்ருத்த்யை
கீர்வாணா நிர்வ்ருணாநா விதரது ஸ ஜயம்
விஷ்ணு ஹேதிப்ரதிர் வ:

### 33.அறிவாற்றலில் சிறப்படைய

தந்வாத்வந்யஸ்ய தாராஸலிலமிவ
தநம் துர்கதஸ்யேவ த்ருஷ்டி:
ஜாத்யந்தஸ்யேவ பங்கோ: பத
விஹ்ருதிரிவ ப்ரீணநீ ப்ரேமபாஜாம்

பத்யுர் மாயாக்ரியாயாம் ப்ரகட
பரிணதிர் விச்வரக்ஷாக்ஷமாயாம்
மாயாமாயாமிநீம் வஸ் த்ருடயது
மஹதீ நேமிரஸ்த்ரேச்வரஸ்ய

**34.நவநிதி பெற**

த்ராணம் யா விஷ்டபாநாம் விதரதி ச
யயா கல்ப்யதே காமபூர்தி:
ந ஸ்தாதும் யத்புரஸ்தாத் ப்ரபவதி
கலயாப்யோஷதீநாமதீச:
உந்மேஷோ யாதி யஸ்யா ந ஸமயநியதிம்
ஸா ச்ரியம் வ: ப்ரதேயாத்
ந்யக்க்ருத்ய த்யோதமாநா த்ரிபுரஹரத்ருசம்
நேமிரஸ்த்ரேஸ்வரஸ்ய

**35.பாப பளு குறைய**

நக்ஷத்ர க்ஷோதபூதிப்ரகரவிகிரண
ஸ்வேதிதாசாவகாசா
ஜீர்ணை: பர்ணைரிவ த்யாம் ஜலதரபடலைச்
சூர்ணிதைரூர்ணுவாநா
ஆஜாவாஜாநவாஜாநதரிபு
ஜநதாரண்யமாவர்தமாநா
நேமிர் வாத்யேவ சாக்ரி ப்ரணுதது
பவதாம் ஸம்ஹதம் பாபதூலம்

**36.துக்கம் விலக**

க்ஷிப்த்வா நேபத்யசாடீமிவ
ஜலதகடாம் ஜிஷ்ணுகோதண்டசித்ராம்
தாராபுஞ்ஜம் ப்ரஸூநாஞ்ஜலிமிவ
விபுலே வ்யோமரங்கே விகீர்ய
நிர்வேதக்லாநிசிந்தாப்ரப்ருதி
பரவசாநந்தரா தாநவேந்த்ராந்
ந்ருத்யந்நாநாலயாட்யம் நட இவ
தநுதாம் சர்ம சக்ரப்ரதிர் வ:

**37.மனம் குளிர**

தௌர்கத்யப்ரௌடதாப ப்ரதிபட
விபவா வித்ததாராஸ் ஸ்ருஜந்தீ
கர்ஜந்தீ சீத்க்ரியாபிர் ஜ்வலதநல
சிகோத்தாமஸௌதாமநீகா
அவ்யாத் க்ரவ்யாத்வதூட நயந
ஜலபரைர்திக்ஷு நவ்யாநநாவ்யாந்
புஷ்யந்தீ ஸிந்துபூராந் ரதசரணபதேர்
நேமிகாதம்பிநீ வ:

**38.சௌபாக்கியங்க்கள் ஏற்பட**

ஸந்தோஹம் தாநவாநாம்
அஜஸமஜமிவா஽ஸலப்ய ஜாஜ்வல்யமாநே
வஹ்நா வஹ்நாய ஜுஹ்வத்
த்ரிதசபரிஷதே ஸ்வஸ்வபாகப்ரதாயீ
ஸ்தோத்ரைர் ப்ரஹ்மாதிகீதைர்
முகரபரிஸரம் ஸ்லாக்யசஸ்த்ரப்ரயோகம்
ப்ராப்தஸ் ஸங்க்ராமஸத்ரம் ப்ரதிரஸரெ
ரிபோ: ப்ரார்த்திதம் ப்ரஸ்நுதாம் வ:

**அர வர்ணனம் 39.ஆபத்து அகல**

உத்பாதாலாதகல்பாந்யஸரெ
பரிஷதாமாஹவப்ரார்த்திநீநாம்
அத்வாநத்வா வபோதக்ஷபண
சணதம: க்ஷேபதீபோபமாநி
த்ரைலோக்யாகாரபாரோத்வஹந
ஸஹமணிஸ்தம்ப ஸம்பத்ஸகாநி
த்ராயந்தாமந்திமாயாம் விபதி
ஸபதி வோ஽ராணி ஸௌதர்சநாநி

**40.கீர்த்தீயில் ப்ரீதி உண்டாக**

ஜ்வாலாஜ்வலப்ரவாளஸ்தபகித
சிரஸோ நாபிமாவாலயந்த்ய:
ஸிக்தா ரக்தாம்புபூரைச்
சகலிதவபுஷாம் சாத்ரவாநீகிநீநாம்

சக்ராக்ரீடப்ரரூடா புஜகசய-
-புஜோபக்நநிக்நப்ரசாரா:
புஷ்யந்த்ய: கீர்த்திபுஷ்பாண்யர
கநகலதா: ப்ரீதயே வ: ப்ரதந்தாம்

**41.வாக்வன்மையில் திகழ**

ஜ்வாலாஜாலாப்திமுத்ரம்
க்ஷிதிவலயமிவாபிப்ரதீ நேமிசக்ரம்
நாகேந்த்ரஸ்யேவ நாபே:
பணபரிஷதிவ ப்ரௌடரத்நப்ரகாசா
தத்தாம் வோ திவ்யஹேதேர்
மதிமரவிததி: க்யாத ஸாஹஸ்ரஸங்க்யா
ஸங்க்யாவத் ஸங்கசித்த ச்ரவண ஹர
குணஸ்யந்தி ஸந்தர்பகர்பாம்

**42.அதிசயம் அதிகம் காண**

ப்ரஹ்மேசோபக்ரமாணாம்
பஹுவிதவிமதக்ஷோத ஸம்மோதி தாநாம்
ஸேவாயை தேவதாநாம்
தநுஜகுலரிபோ: பிண்டிகாத்யங்கபாஜாம்
தத்தத் தாமாந்தஸீமா விபஜநவிதயே
மாநதண்டாயமாநா
பூமாநம் பூயஸா வோ திசது
தசசதீ பாஸ்வராணாமராணாம்

**43.குடும்ப நலன் பெற**

ஜ்வாலாகல்லோலமாலாநிபிடபரிஸராம்
நேமிவேலாம் ததாநே
பூர்வேணாக்ராந்தமத்யே
புவநமயஹவிர்போஜிநா பூருஷேண
ப்ரஸ்ப்பூர்ஜத்ப்ராஜ்யரத்நே
ரதபதஜலதாவேதமாநை: ஸ்புலிங்கை:
பத்ரம் வோ வித்ருமாணாம்
ச்ரியமரவிததிர் விஸ்த்ருணாநா விதத்தாம்

### 44.நன்மை ஒன்றே நெருங்க

நாஸீரஸ்வைரபக்நப்ரதிபட
ருதிராஸாரதாராவஸேகாந்
ஏகாந்தஸ்மேரபத்மப்ர கர
ஸஹசரச்சாயயா ப்ராப்ய நாப்யா
முக்தாநீவாங்குராணி ஸ்புர தநல
சிகாதர்சித ப்ராக்ப்ரவாளா நி
அவ்யாகாதேந பவ்யம் ப்ர தததது
பவதாம் திவ்யஹேதேரராணி

### 45.உயர் பதவி அடைய

தாவோல்காமண்டலீவ த்ருமகணகஹநே
பாடபஸ்யேவ வஹ்நே:
ஜ்வாலாவ்ருத்திர் மஹாப்தெள
ப்ரவயஸி தமஸி ப்ராதர்கப்ரபேவ
சக்ரே யா தாநவாநாம் ஹயகரடிகடா
ஸங்கடே ஜாகடீதி
ப்ராஜ்யம் ஸா வ: ப்ரதேயாத்
பதமரபரிஷத் பத்மநாபாயுதஸ்ய

### 46. கீர்த்திக்கு கேடு வராமலிருக்க

தாபாத் தைத்யப்ரதாபாதபஸமுபசிதாத்
த்ராயமாணம் த்ரிலோகீம்
லோலைர் ஜ்வாலாகலாபை:
ப்ரகடயதபிதச் சீநபட்டாஞ்சலாநி
சத்ராகாரம் சலாகா இவ
கநகக்ருதாச்செளரிதோர்தண்டலக்நம்
பூயாஸூர் பூஷயந்த்யோ ரதசரணமர
ஸ்ப்பூர்த்தய: கீர்தயே வ:

### 47. சத்ருக்கள் நாசமடைய

நாபீசாலாநிகாதாம் நஹநஸமுசிதாம்
வைரிலக்ஷ்மீவசாநாம்
ஸம்யத்வாரீ ஹ்ருதாநாம் ஸமநுவிதததீ
காஞ்சநாலானபங்க்திம்

ராஜ்யா ச ப்ராஜ்யதைத்யவ்ரஜ விஜய
மஹோத்தம்பிதாநாம் புஜாநாம்
துல்யா சக்ராரமாலா துலயது பவதாம்
தூலவச் சத்ருலோகம்

**48. சமுதாய நலனுக்காக**

ஆநேமேச் சக்ரவாலாத் த்விஷ இவ
விததா: பிண்டிகாசண்டதீப்தே:
தீப்தா தீபா இவாऽऽராத்
கஹநரணதமீகாஹிந: பூருஷஸ்ய
சாணே ரேகாயிதாநாம் ரதசரணமயே
சத்ருசௌண்டீர்ய ஹேம்நாம்
ரேகா: ப்ரத்யக்ரலக்நா
இவ புவநமரச்ரேணய: ப்ரீணயந்து

**49. ஸம்பத்துக்கள் ஓடி வந்தடைய**

தீப்தைரர்சி: ப்ரரோஹைர் தலவதி வித்ருதே
பாஹுநாளேந விஷ்ணோ:
உத்யத் ப்ரத்யோதநாபம் ப்ரதயதி
புருஷம் கர்ணிகாவர்ணிகாயாம்
சூடாலம் வேதமௌளிம் கலயதி
கமலே சக்ரநாம்நோபலக்ஷ்யே
லக்ஷ்மீம் ஸ்ப்ராமராணி
ப்ரதிவிதததது வ: கேஸரஸ்ரீகராணி

**50. செல்வச் சிறப்புக்காக**

தாதுஸ்யந்தைரமந்தை: கலுஷித
வபுஷோ நிர்ஜராம்ப: ப்ரபாதாந்
அர்சிஷ்மத்யா ஸ்வமூர்த்யா
ரதசரணகிரேர் நேமிநாபீ தடஸ்ய
வ்யாகுர்வாணாऽऽரபங்க்திர் விதரது
விபுதாவிஸ்த்ருதிம் வித்தகோடீ
கோடீரச்சத்ரபீடீகடககரிகடா
சாமரஸ்ரக்விணீம் வ:

(51 முதல் அடுத்த இதழில் இடம்பெறும்)

rb

# rajmani builders

launches its new project

## "rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
website: www.rajmanibuilders.com

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

VAPSSKY
absolute motion machine

## Our products

Globe Tipper | Unit Converter | Smart Alarm Pro | DRACO, The Dragon




## Our Solutions

- Mobile Games
- Mobile Data Security Systems
- Multimedia content Exchange
- Mobile Applications
- Mobile Enhancement Utilities
- 3D Multiplayer Games

For any Business Related Enquiry email us at contact@vapssky.com

# ஆலயம் தொழுவது சாலவும் நன்று -5



திரு.எஸ்.ராஜப்பன்

திருமுக்கூடல் பிரசன்ன வெங்கடேச பெருமாள் சயனித்த நிலையில் இருந்து எழுந்து நின்று கடாக்ஷித்த உடனே தொண்டைமான் சக்கரவரவர்த்தி, பேராச்சரியத்துடனும் அதீத பக்தியுடனும் பகவானை நோக்கி, "என் அப்பனே வெங்கடேசா!" என்று விளித்திட, அப்பொழுதிலிருந்து இப்பெருமாள் "அப்பன் வெங்கடேசன்" என்னும் திருநாமத்தால் அழைக்கப்படுகிறார்.

இங்கு பெருமாளுடன் ஸ்ரீப்ருகு மஹரிஷி, ஸ்ரீமார்க்கண்டேய மஹரிஷி மற்றும் ஸ்ரீபூமாதேவித்தாயார் இவர்கள் பெருமாளை சேவித்தவண்ணம் திருக்காட்சி அருளுகிறார்கள். இங்கு தேவ தாரு, வன்னி மற்றும் சந்தன மரங்கள் தல விருக்ஷங்களாக விளங்குகின்றன.

இத்திருக்கோயிலில் வைகுண்ட ஏகாதசி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இங்கு வருடம்தோறும் தைமாதப் பிறப்பை ஒட்டி காணும்பொங்கலன்று, பாரிவேட்டை என்னும் உத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறது

இந்த உத்ஸவத்தில் காஞ்சீபுரத்திலிருந்து எழுந்தருளும் ஸ்ரீவரதராஜப் பெருமாள், பழைய சீவரத்திலிருந்து எழுந்தருளும் ஸ்ரீலக்ஷ்மி நரஸிம்ஹப் பெருமாள் மற்றும் இத்திருத்தலப் பெருமாளான ஸ்ரீஅப்பன் வேங்கடேசன் மூவரும் சேர்ந்து சேவை சாதிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இத்திருத்தலத்தாயாராகிய ஸ்ரீஅலர்மேல்மங்கைத் தாயார் தனிசன்னதி கொண்டு அருள்பாலிக்கிறார். மற்றும் இங்கு வரதராஜப் பெருமாள், ஸ்ரீஆண்டாள், ஸ்ரீஆஞ்சநேயர் இவர்களும் தனிசன்னதிகளில் சேவை சாதிக்கிறார்கள்.

சிறிய திருவடி என்று போற்றப்படும் ஸ்ரீஆஞ்சனேய மூர்த்தி, கடன் தொல்லைகளிலிருந்து தம்மை விடுவிக்கப் பிரார்த்திக்கும் பக்தகோடிகளுக்கு அருள்பாலித்து, அவர்களை

கடன் தொல்லைகளிலிருந்து காப்பாற்றுகிறார் என்று கூறப்படுகிறது. தங்கள் ப்ரார்த்தனை நிறைவேறிய பின்பு, பக்தர்கள் ஸ்ரீஆஞ்சனேயருக்கு தேன்குழல் மாலை சாற்றி தங்களது நேர்த்திக்கடனை பூர்த்தி செய்கிறார்கள். இங்கு ஸ்ரீஆஞ்சனேய மூர்த்திக்கு வடைமாலை சாற்றும் வழக்கம் கிடையாது என்று கூறப்படுகின்றது.

ப்ரஸன்ன வெங்கடேசப் பெருமாள் (அப்பன் வெங்கடேசன்) திருக்கோயிலின் சுவர்களில் காணப்படும் ஏராளமான கல்வெட்டுகளின் வாயிலாக அரிய பல வரலாற்றுச் செய்திகளை நம்மால் அறிய முடிகிறது. இக்கோயில் சுமார் 1200 ஆண்டு பழமை வாய்ந்தது. 9ஆம் நூற்றாண்டில் தொண்டை மண்டலத்தை ஆண்ட ராஜா தொண்டைமான் சக்கரவர்த்தியால் இத்திருக்கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. மேலும், முதலாம் குலோத்துங்க சோழன், ராஜேந்திர சோழன் மற்றும் பல மன்னர்களால் இத்திருக்கோயில் திருப்பணி செய்யப்பட்டு, இம்மன்னர்களால் இக்கோயிலுக்கு பலவிதமான மானியங்களும் வழங்கப்பட்டுள்ளதை அறியலாம்.

11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரராஜேந்திர சோழனால் இத்திருகோயில் வளாகத்தில் ஒரு வேதக் கல்லூரி நிறுவப்பட்டிருந்தது. இக்கல்லூரியில் ரிக் வேதம், யஜுர் வேதம், இலக்கணம் போன்ற 8 பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. இக்கல்லூரியில் தங்கிப் படித்த மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைக்கப்பட்டிருந்தது. மேலும் இத்தலத்தில் படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்று இம்மன்னனால் நிர்மாணிக்கப்பட்டு வீரசோழன் மருத்துவமனை என்றும் பெயருடன் நடத்தப்பட்டது. இம்மருத்துவமனையில் கை தேர்ந்த வைத்திய நிபுணர்களும் செவிலித்தாய்களும் பணிபுரிந்தனர். கோதண்டராமன், அஸ்வத்தாமன், பட்டன் என்னும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் பணி புரிந்தனர். இங்கு 20 வகையான மருந்துகள் தயாரிக்கப்பட்டு பலவிதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதற்காக பலவித மூலிகைகள் இவ்வளாகத்தில் வளர்க்கப்பட்டன.

(தொடரும்)

ஸ்ரீராமஜெயம்

## முல்லைவாசல் மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ டாக்டர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் தகப்பனார் மேட்டூர் பரும்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகளின் "ஜன்மசதாப்தி மஹோத்ஸவம்"

ஹேமமாலினி விவாஹ மண்டபம், ராயப்பேட்டையில்
28.9.2012 முதல் 04.10.2012 வரை நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல் – தினமும்:

காலை & பிற்பகல் – வேதபாராயணம் மற்றும் புராண ஸம்பூர்ண பாராயணம்
மாலை – பாகவதர்களின் நாமசங்கீர்த்தனம்
இரவு – உபன்யாசம் – 6.30 PM –8.30 P.M உபநிஷத் மற்றும் கீதை

28.9.2012 – 8A.M – ஸ்ரீகனபாடிகளின் திருநக்ஷத்திரம்

பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ கிருஷ்ண ப்ரேமி ஸ்வாமிகள் அவர்களின் அனுக்ரஹ பாஷணம்

1.10.2012 – 8A.M – தேனீ ஓங்காரானந்த ஸ்வாமிகள் – "கீதையும் குறளும்"

2.10.2012 – பிற்பகல் 3 PM –6 P.M – அருளாசிகள்

1.ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்
2.அஹோபில மடாதிபதிகள் ஸ்ரீநாராயண யதீந்திரர் மற்றும் ஸ்ரீரங்கராஜ யதீந்திரர்
3.பேஜாவர் மடாதிபதிகள் ஸ்ரீவிஸ்வேஸ்வர தீர்த்த ஸ்வாமிகள்
4.ஸ்ரீதயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள்
5.தேனீ ஓங்காரானந்த ஸ்வாமிகள்
6.மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிகள்

4.10.2012 – மாலை 8 P.M – விழா பூர்த்தி உரை

மஹாரண்யம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள்

இங்ஙனம்,
ரா. சுப்பிரமணிய சர்மா, ரா.கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி மற்றும் S.R. ராமலிங்க சர்மாவும், மற்ற சிஷ்யர்களும்

# பாலகர்களுக்கு ஒரு கதை



## தாயுள்ளம்

ஒரு கிராமத்தில், ஒரு பெண்மணி விவசாயம் செய்து வந்தாள். அவளுக்கு ஒரு குழந்தை. தாய் வெளியே சென்று இருக்கையில், பாம்பு ஒன்று கடித்து, அந்த குழந்தை இறந்து விட்டது. எமன் வந்து குழந்தையின் உயிரை பறித்தான். எமன் ஒரு உயிருடன் செல்வதை திரும்பி வந்து கொண்டு இருந்த தாய் பார்த்து விட்டாள். வீட்டுக்கு வந்த அவள் இறந்து கிடந்த தன் குழந்தையை பார்த்தவுடன், அதன் உயிரைத்தான், எமன் தூக்கி செல்கிறான் என்பதை புரிந்து கொண்டாள். அழுது கொண்டே எமனை தொடர்ந்து சென்றாள். அவனிடம் எப்படியும் பேசி, உயிரை திருப்பி வாங்கி விடலாம் என்று நினைத்தாள்.

எமன், அதற்குள் அவள் கண்களில் இருந்து தப்பி ஓடி விட்டான். அவன் சென்ற வழியில் நின்று விழுந்து புலம்பினாள் , அழுதாள், அந்த தாய். எமன் சென்ற வழி தெரியுமா என்று பலரையும் கேட்டு பார்த்தாள். யாருக்கும் அது தெரியவில்லை. ஆச்சரியமாக அப்பொழுது, அங்கு இருந்த ஒரு முள்செடி அந்த தாயிடம் "எனக்கு எமன் சென்ற வழி தெரியும். ஆனால், அதை நான் சொல்ல மாட்டேன். என்னை ஒருவரும் லட்சியம் செய்வதில்லை. என்னை எல்லோரும் ஒதுக்குகின்றனர். என் உடம்பு முழுவதும் முள்ளாய் இருக்கிறது. என்னை இறுக்கி கட்டி கொள்வாயானால், நான் உனக்கு எமன் சென்ற வழியை சொல்கிறேன்" என்றது. உடனே சற்றும் யோசிக்காமல் அந்த தாய், அந்த முள்செடியை இறுக்கி கட்டி கொண்டாள். முள் உடம்பு முழுக்க குத்தி வலித்தது. ரத்தம் வந்தது. அதை பார்த்த அந்த முள்செடிக்கே, இரக்கம் வந்து விட்டது. அது அவளை பார்த்து "உன்னை போல் ஒருவரை நான் பார்த்ததே இல்லை. நீ மேற்கு வழியில் செல். வழியில் கிணறு ஒன்று வரும். அந்த வழியாகவே நீ செல்ல வேண்டும்" என்று சொன்னது.

தாய் மேலே நடக்கையில் கிணறும் வந்தது. அந்த கிணறு தாயை பார்த்து பேசியது "எனது நீரை, பலமுறை மனிதர்கள் இறைத்து எடுத்தனர். என்னை உபயோகப்படுத்தி விட்டு நீர் காலியான பிறகு, நீரில்லாத கிணறு என்று தூற்றுகின்றனர். நான் நிரம்ப ஒரு வழிதான் இருக்கிறது. உன் கண்ணீரால் மட்டும்தான் நான் நிரம்ப முடியும்" என்றது. உடனே தாய் ரத்தம் சொட்டிய உடம்புடன், அந்த கிணற்று மேடையில் தன் தலையை முட்டி கொண்டு அழுதாள். அவள் கண்ணீரானது இரு சொட்டுகள் கிணற்றில் விழுந்தவுடனேயே, கிணறு நிரம்பியது. கிணறு உடனே "உன்னை போல அன்பானவளை நான் பார்த்தது இல்லை. நீ மேலே செல். ஒரு கழுகு வரும். அது உனக்கு வழி சொல்லும்" என்றது. தாய் அந்த கழுகை தேடி சென்றாள்.

கழுகு வழியில் இருந்தது. அவளை பார்த்தவுடன் "உன் குழந்தையை, தெரிந்து கொள்ள உனக்கு கண்கள் எதற்கு?" என்று சொல்லியவாறே, அவள் கண்களை பிடுங்கி கொண்டது. அதுவே "மேலே போ. ஒரு தோட்டம் வரும். அங்குதான் எமன் இருக்கிறான். அவனை கேள்" என்று சொல்லி அனுப்பியது. அந்த தோட்டத்தின் வாசலில் எமன் அமர்ந்திருந்தான்.

எமனுக்கே, ரத்தம் சொட்டி, தலை அடிபட்டு, கண்களை பறிகொடுத்து வரும் தாயை பார்த்து இரக்கம் வந்தது. அவன் சொன்னான் "பெண்ணே! இங்கு உயிர்கள் செடி ரூபத்தில்தான் இருக்கின்றன. அதுவும் பல்லாயிரக்கணக்கில் இருக்கும். அதில் ஒன்று உன் குழந்தை உடையது. நீயே பார்த்து எடுத்து கொள்" என்று சொன்னான். தாய், எமனை தாண்டி உள்ளே சென்றாள்.

அங்கு இருந்த பல்லாயிரம் செடிகளின் மத்தியில், அவள் தன் குழந்தையை தேடவில்லை. "என் குழந்தையை எனக்கு தெரியாதா" என்று சொல்லியவாறே, அந்த கண்ணில்லாத தாய், சரியாக ஒரு செடியின் முன் சென்று, நின்று அதை தடவி கொடுத்து, அதன் மலரை பறித்தாள். அவள் குழந்தையின் செடிதான் அது. இந்த தாயின் அன்பை பார்த்து, எமனே ஆச்சரியப்பட்டு போனான்!! ஹான்ஸ்கிரிஸ்டியன் என்பவர் எழுதிய கதையின் சுருக்கம் இது.

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting Private Limited

## சத்சங்க செய்திகள்

**ஆகஸ்டு 9 – 18** மதுரபுரி ஆஸ்ரமத்தில் **ஸ்ரீமாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனின் 19வது வருட ப்ரும்மோத்ஸவ வைபவம்** ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஹம்ஸ, சேஷ, சிம்ம, புன்னை மர, கருட, யானை, குதிரை வாஹனங்களில் பகவான் பவனி வந்து பக்தர்களை சந்தோஷத்தில் ஆழ்த்தினான். தினமும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், சங்கீத உபன்யாசமாய் ஸ்ரீகிருஷ்ணனின் சரிதத்தை எடுத்து உரைத்தார்கள். கோவிந்த நாம கோஷத்துடன் சித்ரான்னங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ப்ரேமிகவரதனின் கோவிந்த பட்டாபிஷேகம் நடைபெற்றது.

ஆகஸ்டு 15 அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆஸ்ரமத்தில் தேசிய கொடி ஏற்றப்பட்டது. தினமும் ஸ்ரீப்ரேமிகவரதனும், ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாச பெருமாளும், கன்யாகுமரி ஜயஹனுமானும் திவ்ய அலங்காரங்களில் ஜொலித்தனர். பல பாகவதர்கள் கலந்து கொள்ள, தினமும் திவ்யநாம கீர்த்தனமும் புறப்பாடும் நடைபெற்றது. குதிரை வாஹனத்தன்று கலியன் உற்சவமும், நிகுஞ்சோத்ஸவத்தன்று வேணு கானமும் இடம்பெற்றிருந்தது. ரதோத்ஸவம் மஹாரண்யம் கிராம குளம் வரை சென்று திரும்பியது. ஜயஹனுமானுக்கு திருமஞ்சனமும் பூர்ணவடைமாலையும் சாற்றி, ஆஞ்சநேயர் உற்சவத்துடன் இனிதே ப்ரும்மோத்ஸவம் நிறைவு பெற்றது. தினமுமே ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வந்திருந்தார்கள். ராதாகல்யாண தினத்தன்று ஏறத்தாழ மூவாயிரம் அன்பர்கள் வந்து குருவருளும் திருவருளும் பெற்றனர்.

ஆஸ்திரேலியா, அரபு நாடுகள், நியூசிலாந்து, மலேசியா, இந்தோனேஷியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தும் மற்றும் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் அன்பர்கள் வந்து கலந்து கொண்டனர். தினமுமே, ஆஸ்ரமத்தில் விமரிசையாக அன்னதானம் செய்யப்பட்டது. முன்னதாக ஆகஸ்டு 9ஆம் தேதி காலை ப்ரேமிகபவனத்தில் கோகுலாஷ்டமி கொண்டாடப்பட்டது. அனைத்து நாமத்வார் மையங்களிலும் மிக மிக விமரிசையாக

கோகுலாஷ்டமி வைபவம் பல அன்பர்கள் சூழ, குதூகலத்துடன் கொண்டாடப்பட்டது.

**ஆகஸ்டு 15, 2012** - இந்திய சுதந்திர தினத்தன்று, **சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை, தூத்துக்குடி** மற்றும் **குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி, இந்தியா** டிரஸ்டின் சார்பாக மஹாரண்யம், மணிமங்கலம் மற்றும் வெள்ளரை கிராம அரசு பள்ளிகளில் **மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா** நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜியின் அந்தரங்க செயலாளர் டாக்டர் ஆ.பாக்யநாதன் மற்றும் சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளையை சேர்ந்த தூத்துக்குடி கண்ணன் - மாலா தம்பதியினர் இதில் கலந்து கொண்டனர். மேலும் வெள்ளரை கிராம அரசு பள்ளியில் சுத்திரிகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிவறை நீர் வசதியும், மஹாரண்யம் கிராம அரசு பள்ளியில் சுத்திரிகரிக்கப்பட்ட குடிநீருக்கான வசதியும் செய்து தரப்படது.

**சனாதனப் புதிர் : பகுதி – 43** –ஆத்ரேயன் (விடைகள் அடுத்த இதழில்)

1. பரசுராமரின் முக்கிய சீடர்கள் யார்? இவ ரால் கொல்லப்பட்ட இரு முக்கிய அரக்கர்கள் யார்?
2. சாத்யகியின் சங்கினுடைய பெயர் என்ன?
3. தேவிகா, யௌதேயன், யுதிஷ்டிரர் இவர்களுக்கு என்ன உறவு முறை?
4. த்ருடஸ்யு - இத்மவாஹர் இவர் யார்?
5. துச்சாஸனன் இறந்த பிறகு அவனது அரண்மனை யாருக்கு கொடுக்கப்பட்டது?
6. ஸ்ரீகிருஷ்ணரின் ஸாரதியின் பெயர் என்ன?
7. தும்புரு - இவரின் தாய் தந்தை யார்? இவர் எங்கே காணப்படுகிறார்?
8. தபதியின் அப்பா மற்றும் கணவரின் பெயர் என்ன?
9. பிரஹஸ்பதியின் மூன்றாவது பிள்ளை பெயர் என்ன?
10. அர்ஜுனன் மனைவி மற்றும் பிள்ளைகள் பெயர் என்ன?
11. பீமசேனன் மனைவி மற்றும் பிள்ளைகள் பெயர் என்ன?

ஒரு இடத்தில் அதிகமான சக்தி உள்ள current, ஒரு wire-இல் pass-ஆனால் அதன் பக்கத்தில் இருப்பவர்கள், வருபவர்கள் எல்லோரையும் அது பாதிக்கும். அதுபோல், ஒரு மஹாத்மாவினிடம் ஏற்படும் இறை அனுபவம், அருகில் உள்ளவர்களுக்கும் நன்மை செய்யும். –மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## சனாதனப்புதிர் பகுதி 42 - விடைகள்- ஆத்ரேயன்

1. குந்தி சூரிய புத்திரனான கர்ணனை கவச குண்டலத்தோடு பிறந்த பொழுது - வஸுஷேணன். இந்திரன் கவச குண்டலங்களைத் தானமாகப் பெற்றபின் - விகர்த்தன்
2. ஸூரஸேனன் - தந்தை ; குந்தி, போஜனுக்கு தத்தமாகக் கொடுக்கப்பட்டாள். இயற்பெயர் ப்ருதா.
3. குந்தி போஜனுடைய பிள்ளை. குந்தியின் சகோதரர்.
4. ருமண்வான் ; ஸுஷேணன் ; வசு ; விஸ்வாவசு ; பரசுராம்.
5. ப்ராக்ஜோதிஷபுரத்து அரசன்; பகதத்தனின் பிள்ளை; அஸ்வ--மேத யாகத்தின்பொழுது அர்ஜுனனால் தோற்கடிக்கப்பட்டான்
6. மகரிஷி குணிகர்கரின் புத்ரி ; பால ப்ரம்ஹசாரிணி ; நாரதர் மூலம் ச்ருங்கவான் என்ற மகரிஷியை மணந்து, தனது தவத்தின் பாதி பங்கை அவருக்கு கொடுத்த பெண்மணி
7. வைஜயந்தி
8. அர்த்தசந்திரன்; க்ரௌஞ்ச, கருட, சக்ர, மகர, மண்டல, மண்டலார்த்வ, வஜ்ர, சகட, ச்யேன, சர்வதோபத்ர, ஸுபர்ண, ஸுசிமுக்ய இப்படி பல வ்யூகங்கள் (பீஷ்ம, துரோண பர்வாக்கள்)
9. ஸூரசேனன். இவர் குந்தியின் தகப்பன். பிறகு குந்தி, போஜனுக்கு தத்தமாகத் தரப்பட்டாள்
10. யுயுதானன் ; வ்ருஷ்ணி வம்சத்தில் பிறந்த சினிகுமாரன் சத்யகனின் பிள்ளை
11. உத்தாலகரின் புத்ரி; கஹோட ரிஷியின் மனைவி; அஷ்டாவக்ரனின் தாய்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீபகவன்தாஸ் பாபா- 5

பாபா பொறுமையின் வடிவமாகவே இருந்தார் என்று கூறவேண்டும். அவர் மஹந்தாக பதவியேற்றவுடன், ஒருவர் பொறாமையினால், பாபாவிற்கு விஷம் கொடுத்து விட்டார். அவருக்கு எதிராக பாபா ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

மற்றொரு முறை, வேறொரு நபர், விஷம் கலந்த ப்ரஸாதத்தை பாபாவிற்கு கொடுத்தார். பாபாவிற்கு இது தெரியவந்தபோதிலும், பாபா அதை ப்ரஸாதம் என்ற பாவத்தில் ஸ்வீகரித்துக் கொண்டார். பாபாவை விஷம் பாதிக்கவேயில்லை. ஆனால் அந்த நபரோ, டடியாஸ்தானத்திற்கு வெளியே சென்ற மாத்திரத்தில், மயங்கி விழுந்துவிட்டார். பாபாவிற்கு இது தெரியவந்தவுடன் அவர், "அவரது காதுகளில் ராதா நாமத்தை கூறுங்கள்" என்று கூறினார். அவ்வாறு கூறிய மாத்திரத்தில், அந்த நபருக்கு நினைவு திரும்பியது. அவனிடமும், பொறுமை-சாலியான பாபா ஒரு வார்த்தையும் கூறவில்லை.

ஆனால், மூன்றாவது முறை அவரது சிஷ்யரான ஸ்ரீநாகரீதாஸ் என்பவர், பாபாவை விஷம் கொடுத்து கொல்ல முயன்றபோது, பாபா, அந்த நபருக்கு, க்ருபையினால் தண்டனையளிக்க வேண்டியதாயிற்று. நாகரீதாஸ், பாபாவிற்கு பின்னர் அவ்விடத்தின் மஹந்தாக ஆக விரும்பினார். ஒருநாள் பாபா, "எனக்கு பின்பு மஹந்தாக பொறுப்பேற்கப்போகிறவர் வந்து கொண்டிருக்கிறார்" என்று கூறினார். அச்சமயமே (பின்பு மஹந்தாக ஆன) ரண்சோட்தாஸ்ஜீ பாபா, ப்ருந்தாவனம் வந்தார். பாபாவின் ஸத்ஸங்கத்தினால் அவர் மிகவும் கவரப்பட்டார். பாபாவிடமிருந்தே, தீக்ஷையும் ஸந்யாஸமும் பெற்று, அவருடைய ஸேவையிலேயே தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். நாகரீதாஸர், பாபா, ரண்சோட்தாஸ்ஜீயை தனது வாரிசாக

அறிவிக்கும் முன்பே, பாபாவை பரலோகம் அனுப்பிவிட வேண்டும் என்று திட்டமிட்டார். அதனால் பாபா பருகும் ஒரு குளிர்பானத்தில், அவர் பாதரஸத்தை (mercury) கலந்துவிட்டார். ஆனால், பாபாவை எவ்விதத்திலும் பாதிக்காமல், அது வெளியே வந்து விட்டது. நன்றி மறந்தவன் குருத்ரோஹி என்ற அடிப்படையில், பாபா அவனை த்யாகம் செய்துவிட்டார்.

பாபாவிற்கு, நாமத்தின் மீதான நிஷ்டை, மிகவும் பலமானது. நாமத்தின் சக்தியில், அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது. ஒருநாள், அவரது இடத்திற்கு பின் பகுதியில் அமைந்திருந்த குடிலில், ஒரு பக்தர் தங்கியிருந்தார். இரவு, அவர் கால் ஒரு பாம்பின் வாயில் பட்டுவிட்டது. பாம்பு அவரது கால்களை சுற்றிக் கொண்டது. அவர் பயத்தினால், உரக்க கத்தினார். அந்த சப்தத்தை கேட்டதும், பாபா தனது ஆஸனத்தில் அமர்ந்தவாறே, உச்சஸ்வரத்தில் "ராதே ராதே" என்று ஜபிக்க ஆரம்பித்தார். ராதா நாமத்தை கூறிய மறுகணம், பாம்பு அந்த பக்தரை எதுவுமே செய்யாமல் சென்றுவிட்டது.

இதன்பின் சிறிது காலம் சென்றதும், பாபாவின் பார்வை உள்முகமாகிவிட்டது. இவ்வுலகில் இருந்தும் இல்லாதது போன்றே இருந்தார் பாபா. அவரது உள் அனுபவம், அவரது வெளி நடவடிக்கையினால் எப்பொழுதாவது தெரியும். ஒருநாள் பாபா தனது பஜன குடீரத்தின் வெளியே அமர்ந்திருந்தார். பச்சூலால் அவரருகில் அமர்ந்திருந்தார். அப்பொழுது ஒரு அலௌகிகமான ப்ரகாசத்தையும், பாபா யாருடனோ பேசுவதையும் அவர் கண்டார். ஆனால் அவருக்கு ஒருவரும் கண்ணில் தென்படவில்லை, பாபா பேசுவதும் அவருக்கு புரியவில்லை. பின்னர் பாபாவிடம் இது பற்றி கேட்டபொழுது, பாபா ஒரு புன்னகை மட்டுமே பதிலளித்தார்.

ஒருநாள் பச்சூலால் பார்த்து கொண்டு இருந்தபோதே பாபாவினுடைய வஸ்த்ரம் முழுவதும் ஈரமாகி விட்டது. இது பற்றி கேட்டபொழுது, பாபா, ராதாதேவி யமுனா ஸ்நானத்திற்கு சென்றிருந்ததாகவும், தானும் அவருடன் சென்றிருந்ததாகவும் கூறினார்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 110*



—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*அறாஅ மைந்தின், செறாஅச் செங்கண்,*
*செரு மிகு திகிரிச் செல்வ! வெல்போர்*

நீங்காத வலியை உடையவனே! கோபப்படாமல் இருக்கும்போதே, இயற்கையாகவே சிவந்த கண்களை உடையாய்! போர்க்களத்தே, பகைவரை அழித்தலில் பட்டு விளங்கும் சக்கரப் படையினை உடைய செல்வனே. சக்கரப் படையாற் செய்யும் வெல் போரையும் உடையவனே! "செருமிகு வெல் போர்த் திகிரிச் செல்வ" அன மாற்றிப் பொருள் கொள்க. எப்பொழுதும் நீங்காத வலிமை உடையவன் திருமால் என்பது பலராமனைக் குறிக்கும். *வலியொத்தீயே வாலியோனை* என்ற புறநானூறு தெரிவிக்கிறது.

எப்பொழுதும் சிவந்த கண்கள் உடையவன் பெருமான். *கார்மேனிச் செங்கண், செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ , செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால்* என்று திருப்பாவையில் பல்லிடத்தும் ஆண்டாள் கூறியது கொண்டு அறிக.

*ஏரி நகை இடை இடுபு இழைத்த நறுந்தார்ப்*
*புரிமலர்த் துழாஅய் மேவல் மார்பினோய்!*

நெருப்புப் போன்ற சிவந்த நிறம் உடைய, வெட்சி மலரை இடையிட்டுத் தொடுத்த விரும்பத் தகுந்த மலர்த் துழாயால் ஆகிய மாலையை விரும்புதல் உடைய மார்பினை உடையாய்! எனப் புகழ்ந்தார். எப்பொழுதும் அவுணரை அழித்து, உயிர்களைக் காக்கும் இயல்பினன் ஆதலின், வெட்சி மலர் இடையிட்டுத் தொடுத்த துழாஅய் மாலை அணிந்தவனாகக் குறிப்பிட்டார். புறத்திணையில் வெட்சி முதல் ஆகும். வெட்சிப்பூவை அணிதலால் போர் தொடுக்கம் அறிவிக்கப்படுகிறது.

"துழாய் மேவல் மார்பினோய்" என்பதற்கு துழாய் விரும்பும் மார்பினை உடையவன் என்றும், துழாயை விரும்பும் மார்பினை உடையவன் என்றும் தடுமாறு தொழிற்பெயராகக் கொண்டு பொருள் செய்யலாம்படிக் கூறிய அழகு நினையும்தொறும் இன்பம் பயப்பது - துழாயே ஆசைப்படும் படியான மார்பினை உடையவன் பகவான் என்றபடி

*அன்னை என நினைஇ, நின்அடி தொழுதனெம்;*
*பன்மாண் அடுக்க இறைஞ்சினெம் வாழ்த்தினெம்-*
*முன்னும் முன்னும் யாம்செய் தவப் பயத்தால்;*
*இன்னும் இன்னும் எம் காமம் இதுவே!*

பண்டும் பண்டும் யாம் செய்த தவப்பயனால் அத்தன்மைகளை உடையாய் என நினைத்து, நின் திருவடியைக் கையால் தொழுது பலகாலும் அடுத்து அடுத்து, வணங்கி, வாழ்த்தும் பேறு பெற்றோம். மேலும் மேலும், யாம் ஆசைப்படுகின்ற பொருள் இதுவே. இதுகாறும் எம்பெருமானைப் பலவாறாக வாழ்த்தியவர்கள், தாம் வாழ்த்திய அத்தன்மைகளை உடையவன் பெருமான் என நினைத்து, அப்பெருமானது திருவடிகளைக் கையால் தொழுதார்கள். "அன்னை" அத்தன்மையை உடையாய்! என விளி - "இனி தாய் என்று நினைத்து உன்னைத் தொழுதேம்" என்றும் பொருள்படும்படி அன்னை என்று அமைத்த சொல்லழகு இன்புறத்தக்கது. இறைவன் தாயாய் உள்ளவன் அல்லவா!

*தாய் என உயிர்க்கு நல்கி, தருமமும் தகவும் சால்பும்*
*நீ என நின்ற நம்பி* (கம்ப. 4061)

என்ற வாலியின் கூற்றில் வரும் கம்பர் வாக்கைக் காண்க. பலமுறை திரும்பத் திரும்ப வணங்கினேம் என்பதை அடுக்க என்றார். அடுக்குதல் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லுதல் செய்தலாகும். தொழுதல் வேறு, இறைஞ்சுதல் வேறு. தொழுதல் கைகுவித்து நிற்றலாகும். இறைஞ்சுதல் தலை வணங்கி நிற்றல் ஆகும். மூன்றாவது அடிவீழ்தல் ஆகும். ஒரு கோல் (தண்டம்) கீழே விழுந்தால் எப்படி விழுமோ, அப்படி கீழே விழுந்து வணங்குதல். இதைத் தண்டம் சமர்ப்பித்தல் என்பர். வாழ்த்துதல் என்பது வாயால் தோத்திரம் செய்தலாகும். (தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



## பசவேஸ்வரர் – 7

ஈசான்யகுருவிடம் பாடம் கற்கலாம் என்று நினைத்து கூடல சங்கமம் சென்றார் பசவர். ஆனால் நாகம்மாவின் கணவன் தீர்த்தயாத்திரை சென்றதால், கணவன் தீர்த்தயாத்திரை சென்று வரும்வரையில், சிறுபெண்ணான நாகம்மா அன்னை வீட்டில் பகேவாடியிலேயே இருப்பதென முடிவாயிற்று. தம்பி பசவரும் அதனால் பகேவாடி திரும்பி வந்தார்.

இதே சமயத்தில், மதிராஜரின் மாமனார் திடீரென உடல் நலம் குன்றி உயிர் துறந்தார். ஈமச்சடங்குகள் செய்கையில் பசவரும் இருந்தார். மரணத்தை நேரில் பார்த்ததும், வைதவ்ய கோலத்தை, தன் அன்னை வழி பாட்டி மேற்கொண்டதை நேரில் கண்டதும் அவரது மனதில் பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது. "மரணம் என்றால் என்ன?" என்று அவருக்கு கேள்வி வந்து கொண்டே இருந்தது. அவர் கேள்விக்கு விடை தருவார் ஒருவருமில்லை. அந்த கேள்வியை அவரால் முழுமையாக ஒதுக்கவும் முடியவில்லை. பிற கேள்விகளை போல் அவருக்கே விடையும் கிடைக்கவில்லை.

பகேவாடியில் வீட்டிலேயே பசவர் மேலும் பாடம் கற்க மதிராஜர் ஏற்பாடு செய்தார். பிரும்மோபதேசத்திற்கு பின் அவர் முறையாக வேதம் பயின்றார். வேத மந்திரங்கள் அனைத்தையும் சொல்கையிலேயே, அதன் அர்த்தங்கள் அவருக்குள் ஸ்புரித்தன. இருப்பினும் ஆசானிடம் கேட்டு கேட்டு, அவற்றை தெளிவு படுத்தி கொள்வார்.

சிறு வயதில், குருவினால் கழுத்தில் லிங்கம் அணிவிக்கப்பட்டதில் இருந்து, அதனை பசவர் கழற்றியதே இல்லை. வேதகர்மங்களை செய்கையிலும், அப்படியே அவர் பிடிவாதமாக இருந்தது, அங்கிருந்த சிலருக்கு ஏற்புடையதாக இல்லை. மதிராஜரே கூட, கூடலசங்கமத்தில் பசவர் படிப்பதை

விட, தன்னுடன் இருந்து படித்தால் நல்லது, என்றுதான் நினைத்தார். கூடலசங்கமம் சென்றால், அவர் ஒரு தீவிர சைவ மதத்தினராகி விடுவாரோ என்றும், வேதத்தை தம் போல் அவரால் ஆராதிக்க முடியாது என்றும் நினைத்தவர்தான் மதிராஜர். ஆனால் அவரது சந்தேகம் எல்லாம், ஈசான்ய குருவின் சாந்தி பொருந்திய முகத்தை பார்த்தால் ஓடி விடும்.

பசவர் வைதீக தர்மத்தில் பற்று கொண்டவராகவும், அதன் நியதிகளை மதிப்பவராகவும் நடந்து வந்தார். வேத மந்திரங்களுக்கு வலிமை அதிகமாக இருப்பதை கண்டார் பசவர். வேதமார்க்கப்படி தேவதைகளை உபாசிப்பதை விரும்பினாலும், அதை சுயலாபத்திற்காக மட்டுமே பிரயோகிப்பதை, அவர் ஏற்கவில்லை. எக்காலத்திலும் இயற்கையாக தனக்கு இருந்த சிவபக்தியையும் பசவர் விடவும் இல்லை.

பசவர் பிறக்கையில் பகேவாடியில் நடந்த வழக்கில் ஒரு சிறுவன் குற்றம் சாட்டப்பட்டு தப்பினான் என்று பார்த்தோம் அல்லவா? பெரியவீரன் என்கிற அவன் வளர்ந்து, திருமணமும் ஆகி இருந்தது. அவனுக்கு வந்த ஒரு கஷ்டம், பசவர் தன் ஊரையும், பெற்றோரையும் விட்டு பிரிய காரணமாகியது.

பிறருக்கு உதவுவது என்பது பசவருக்கு ஒரு விரதமாக இருந்தது. பிறருக்கு துன்பம் என்கிற காலத்தில் தனக்கு இருந்த கட்டுப்பாடுகளை மீறி உதவி செய்வார் பசவர். அப்படி நடக்கையிலும், உணர்ச்சிவயப்பட்டு ஒரு காரியத்தை பசவர் செய்தார் என்றே இல்லை. ஒவ்வொரு காரியம் செய்கையிலும் அறிவின் சம்மதமும், இதயத்தின் சம்மதமும் பெற்றே அவர் செய்தார். இப்படி அவர் நடந்ததை, உணர்வுகளின் கொந்தளிப்புகளாக நினைக்காமல், ஒரு தர்ம காரியத்திற்காக வந்த புருஷருக்குள் ஏற்படுகிற மாற்றம் என்று, தந்தை மதிராஜரால் கூட, முழுமையாக புரிந்து கொள்ள முடியவில்லை. மதிராஜருக்கு இது புரியாவிடினும், அன்னை மதலாம்பிகை மட்டும் அடிக்கடி அவரிடம் "அவன் நமக்காக பிறந்தவனில்லை" என்று சொல்லியவாறு இருப்பாள்.

(தொடரும்)

"மதுரமுரளி" சந்தா
5 ஆண்டு - ரூ 600
3ஆண்டு - ரூ 360
1 ஆண்டு - ரூ 120
For Details:
+91-44-24895875

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:
Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83

உள்ளூர் காசோலை / நேரில் ரொக்கம் / **D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / மணியார்டர் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | செப்டம்பர் 12, 26 அக்டோபர் 11, 25 |
| செப் 12 - 18 | மாலை 6.30 - 8.30 பெங்களூர் ஸ்ரீசுந்தர ஹனுமான் கோவிலில் ஸ்ரீமத்பாகவத சப்தாஹ பிரவசனம் |
| அக்டோபர் 4 | ராயப்பேட்டை, சென்னை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.